Series P/PB2/1

SET 1

CLASS XII PRE-BOARD EXAMINATION – 2025-26

Q.P. Code: 106/2/1

Roll No. | | | | | | | | |

Candidate must write the Q.P. Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains 10 printed pages.
- Please check that this question paper contains 15 questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

தமிழ்

TAMIL

கால அளவு: 3 மணி | **மொத்த மதிப்பெண்கள்: 80**

Time allowed : 3 hours | *Maximum Marks : 80*

General Instructions:

Read the following instructions very carefully and strictly follow them:

1. *This question contains FIVE sections.*
2. *Section A: contains 2 questions [Question No. 1 to 2]*
3. *Section B: contains 4 questions [Question No. 3 to 6]*
4. *Section C: contains 4 questions [Question No. 7 to 10]*
5. *Section D: contains 2 questions [Question No. 11 to 12]*
6. *Section E: contains 3 questions [Question No. 13 to 15]*
7. *Attempt as per specific instructions for each question.*
8. *Please write down the serial no. of the question in the answer book before attempting it.*

Section –A Unseen passage (10 Marks)

பகுதி – அ (படித்தல்) 10 மதிப்பெண்கள்

1.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக. (5x1=5)

கி.பி. 1014 ஆம் ஆண்டில் சோழப் பேரரசின் மன்னராக முடிசூட்டிக் கொண்ட ராஜேந்திர சோழன், தான் ஆட்சிக்கு வந்து சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சோழர் தலைநகரைத் தஞ்சாவூரில் இருந்து மாற்ற விரும்பினார். அதன்படி, தஞ்சாவூரில் இருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் தனது தலைநகரத்தை உருவாக்க முடிவு செய்தார். அந்தத் தலைநகரம், கங்கை கொண்டபுரம், கங்காபுரம் உள்ளிட்ட பல பெயர்களால் அழைக்கப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம். இந்த இடம் தற்போது அரியலூர் மாவட்டத்தில் இருக்கிறது. இந்தப் புதிய தலைநகரத்தில் தஞ்சை பெரிய கோவிலைப் போலவே கங்கை கொண்ட சோழீச்சரம் என்ற பெயரில் மிகப்பெரிய கோவில் ஒன்று உருவாக்கப்பட்டது. ஆனால், இந்தப் பகுதி தஞ்சையைப் போன்ற நீர்வளத்துடன் இருக்கவில்லை. ஆகவே, இந்த நகருக்கென ஒரு மிகப்பெரிய ஏரியை உருவாக்கினார் ராஜேந்திர சோழன். அந்த ஏரிக்குச் சோழ கங்கம் என்று பெயரிடப்பட்டது. தற்போது இந்த ஏரி பொன்னேரி எனக் குறிப்பிடப்படுகிறது. இவ்வளவு பெரிய ஏரிக்கான நீரைக் கொண்டு வர, கொள்ளிடத்தில் இருந்து ஒரு கால்வாயும் வெள்ளாற்றில் இருந்து ஒரு கால்வாயும் வெட்டப்பட்டதாகத் தனது 'ராஜேந்திர சோழன்' நூலில் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார். இந்த சோழ கங்கம் ஏரியின் வடிகாலாகத்தான் தற்போதும் மிகப்பெரிய ஏரியாக விளங்கும் வீராணம் ஏரியே இருந்ததாக தனது 'பிற்காலச் சோழர்கள்' நூலில் குறிப்பிடுகிறார் தி.வை.சதாசிவ பண்டாரத்தார். கங்கைச் சமவெளி மீதான தனது வெற்றிகளைக் குறிக்கும் விதமாக இந்த ஏரிக்கு சோழ கங்கம் என்ற பெயரை ராஜேந்திர சோழன் சூட்டியிருக்கலாம். திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் உள்ள சமஸ்கிருத குறிப்புகள், இதை 'கங்கா - ஜலமயம் ஜெயஸ்தம்பம்', அதாவது 'நீர்மயமான வெற்றித் தூண்' எனக் குறிப்பிடுகின்றன.

வினாக்கள்:

i. ராஜேந்திர சோழனால் சோழர் தலைநகர் எங்கிருந்து மாற்றப்பட்டது?

A) தஞ்சாவூர் B) சோழ கங்கம்

C) அரியலூர் D) கங்கை கொண்ட சோழபுரம்

ii. 'ராஜேந்திர சோழன்' நூலின் ஆசிரியர் யார்?

A) மா. ராஜேந்திரன் B) மா. இராசமாணிக்கனார்

C) கே.கே.பிள்ளை D) தி.வை. சதாசிவ பண்டாரத்தார்

iii. சோழ கங்கம் தற்போது எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

A) கொள்ளிடம் B) ஜெயஸ்தம்பம்

C) பொன்னேரி D) கங்காபுரம்

iv. சோழகங்க வடிகாலென தி.வை.சதாசிவபண்டாரத்தார் குறிப்பிடுவது எது?

A) வீராணம்ஏரி B) கொள்ளிடம்

C) வெள்ளாறு D) பொன்னேரி

v. கங்கை கொண்ட சோழபுரம் தற்போது எங்கு உள்ளது?

A) தஞ்சாவூர் B) அரியலூர்

C) திருச்சி D) சோழபுரம்

2.பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. (5x1=5)

1960 ஆம் ஆண்டுகளிலேயே ஓசோன் மற்றும் உயர்ந்து வரும் மாசு போன்ற மாற்றமடைந்த வந்த வளிமண்டலத் தடயங்களை பதிவு செய்தார் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் மூடுபனியும் ஏலக்காயும் சூழ்ந்த பீர்மேட்டு மலையில் பிறந்த அன்னாமணி. வானத்தின் ஓசோன் மற்றும் மின்னியல் மாறுபாடுகளை ஆய்வு செய்த அன்னாமணி நகரமயமாதலை முன்னேற்றத்தின் அடையாளமாக கருதாமல் வான் வேதியியலை சீர்குலைக்கும் சக்தியாகவே பார்த்தார். 1957 ஆம் ஆண்டு இந்திய வானிலை ஆய்வுத் துறையின் புனே தலைமையகத்தில் அன்னா மணி பணியில் சேர்ந்து வானியல் ஆய்வுகளை துல்லிய அளவீடுகள் கொண்டு முறைப்படுத்தினார். இந்தியாவின் முதல் ஓசோன் செறிவறி மிதவை பலூனை இந்திய வானிலை ஆராய்ச்சி நிறுவனம் 1964-ஆம் ஆண்டு அன்னாமணி மேற்பார்வையில் பறக்க விட்டது. 1970 ஆம் ஆண்டில் அன்னா மணியின் தலைமையில் புனேயில் இந்திய தேசிய ஓசோன் மையம் உருவாக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு பின் இந்த மையம் ஆசிய பிராந்திய ஓசோன் மையமாக மாறியது. நகரமயமாதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கிடையிலான ஒப்புமையை கூறிய முதல் இந்திய விஞ்ஞானியான அன்னாமணி இரவில் அதிகரிக்கும் வெப்பம், காலம் தவறிய பருவமழை தொடக்கம் ஆகியவை தொழில்துறை மாசுடன் தொடர்புடையது எனத் தனது ஆய்வு குறிப்புகளில் கூறியுள்ளார்

வினாக்கள்:

(i) அன்னாமணி எதனைப் பதிவு செய்தார்?

(ii) அன்னாமணி நகரமயமாக்கலை எவ்வாறு கருதினார்?

(iii) இந்தியாவின் முதல் ஓசோன் செறிவறிமிதவை பலூனைப் பறக்கவிட்டது எது?

(iv) அன்னாமணி பிறந்த மாநிலம் எது?

(v) ஆசிய பிராந்திய ஓசோன் மையமாக மாறியது எது?

SECTION –B (Grammar) 12 Marks

பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 திப்பெண்கள்

3.பிழைநீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக.
(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

(i) ஆலயம் தொலுவது சாழவும் நன்று

(A) ஆலயம் தொளுவது சாழவும் நன்று

(B) ஆலயம் தொழுவது சாலவும் நன்று

(C) ஆழயம் தொழுவது சாழவும் நன்று

(D) ஆலயம் தொலுவது சாலவும் நன்று

ii) மணத்தில் கருனை நிறைந்தவர் அரம் செய்கின்றனர்.

(A) மணத்தில் கருணை நிரைந்தவர் அறம் செய்கின்றனர்.

(B) மநத்தில் கருனை நிறைந்தவர் அரம் செய்கின்றனர்.

(C) மனத்தில் கருணை நிறைந்தவர் அறம் செய்கின்றனர்.

(D) மணத்தில் கருனை நிரைந்தவர் அரம் செய்கின்றனர்.

(iii) சிருகக் கட்டிப் பெறுக வால்

(A) சிறுகக் கட்டிப் பெறுக வாழ்

(B) சிறுகக் கட்டிப் பெறுக வாள்

(C) சிருகக் கட்டிப் பெறுக வாள்

(D) சிறுகக் கட்டிப் பெருக வாழ்

(iv) அரிவு பனிவு தரும். அறியாமை ஆனவம் தரும்

(A) அரிவு பணிவு தரும். அறியாமை ஆணவம் தரும்

(B) அறிவு பனிவு தரும். அறியாமை ஆணவம் தரும்

(C) அறிவு பணிவு தரும். அறியாமை ஆணவம் தரும்

(D) அறிவு பனிவு தரும். அரியாமை ஆணவம் தரும்

(v) கடலலையில் ஒரு உறல் உருழுது பிறழுது

(A) கடலலையில் ஒரு உரல் உருளுது பிறழுது

(B) கடலலையில் ஒரு உரல் உருளுது பிரழுது

(C) கடலலையில் ஒரு உரல் உருழுது பிரழுது

(D) கடலலையில் ஒரு உறல் உருளுது பிறளுது

4.வல்லினமெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

(i) கோவில் தெப்ப குளம் இந்தபக்கமா? அந்தப்பக்கமா?

(A) கோவில் தெப்பக்குளம் இந்தபக்கமா? அந்தப்பக்கமா?

(B) கோவில் தெப்பகுளம் இந்தப்பக்கமா? அந்தபக்கமா?

(C) கோவில் தெப்பக்குளம் இந்தபக்கமா? அந்தபக்கமா?

(D) கோவில் தெப்பக்குளம் இந்தப்பக்கமா? அந்தப்பக்கமா?

(ii) கல்லனையை கட்டிய கரிகாலனுக்கு சிலை வைத்தனர்.

(A) கல்லணையைக் கட்டிய கரிகாலனுக்கு சிலை வைத்தனர்.

(B) கல்லணையைக் கட்டிய கரிகாலனுக்குச் சிலை வைத்தனர்.

(C) கல்லணையைக் கட்டியக் கரிகாலனுக்குச் சிலை வைத்தனர்.

(D) கல்லணையை கட்டியக் கரிகாலனுக்குச் சிலை வைத்தனர்.

(iii) எட்டுதொகையும் பத்துபாட்டும் தமிழர்க்கு பெருமை சேர்ப்பன.

(A) எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தமிழர்க்கு பெருமை சேர்ப்பன.

(B) எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தமிழர்க்குப் பெருமைச் சேர்ப்பன.

(C) எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தமிழர்க்குப் பெருமை சேர்ப்பன.

(D) எட்டுதொகையும் பத்துபாட்டும் தமிழர்க்குப் பெருமைச் சேர்ப்பன.

(iv) தமிழ்தாத்தா உ.வே.சாவின் திருவுருவசிலை, சென்னை மாநில கல்லூரியில் வங்ககடலை நோக்கி நிறுவப்பட்டுள்ளது.

(A) தமிழ்தாத்தா உ.வே.சாவின் திருவுருவச்சிலை, சென்னை மாநில கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிறுவப்பட்டுள்ளது.

(B) தமிழ்த்தாத்தா உ.வே.சாவின் திருவுருவச்சிலை, சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிறுவப்பட்டுள்ளது.

(C) தமிழ்த்தாத்தா உ.வே.சாவின் திருவுருவச்சிலை, சென்னை மாநில கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிறுவப்பட்டுள்ளது.

(D) தமிழ்த்தாத்தா உ.வே.சாவின் திருவுருவசிலை, சென்னை மாநிலக் கல்லூரியில் வங்ககடலை நோக்கி நிறுவப்பட்டுள்ளது.

(v) எப்படி செய்தாலும் இப்படி செய் என்று செப்பியபடி இருக்கிறான்.

(A) எப்படிச் செய்தாலும் இப்படி செய் என்று செப்பியபடி இருக்கிறான்.

(B) எப்படிச் செய்தாலும் இப்படிச் செய் என்று செப்பியப்படி இருக்கிறான்.

(C) எப்படிச் செய்தாலும் இப்படிச் செய் என்றுச் செப்பியப்படி இருக்கிறான்.

(D) எப்படிச் செய்தாலும் இப்படிச் செய் என்று செப்பியபடி இருக்கிறான்.

5.எடுத்துக்காட்டு எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

(i) உணர்ச்சிவாக்கியம்

(A) திருக்குறள் பொருட் சிறப்பு உடையது.

(B) திருக்குறளின் பொருட் சிறப்பைக் கற்றவரே அறிவர்

(C) என்னே ! திருக்குறளின் பொருட் சிறப்பு.

(D) திருக்குறளின் பொருட் சிறப்பே சிறப்பு

(ii) உடன்பாட்டு வினைத் தொடர்

(A) காந்தியடிகளை அனைவரும் அறிவர்.

(B) காந்தியடிகளை அறியாதார் இலர்.

(C) என்ன? காந்திஅடிகளை அறியீரா!

(D) காந்தியடிகளை அறியாதவரும் உளரோ!

(iii) பிறவினை வாக்கியம்

(A) பாரி உண்டான் (B) பாரி உண்பித்தான்

(C) பாரி உண்டு வந்தான் (D) பாரி உண்டிலன்

(iv) தொடர் வாக்கியம்

(A) கதிரவன் கிழக்கில் உதிக்கிறது

(B) கதிரவன் தோன்றியது; ஆகையால், பனி மறைந்தது.

(C) கதிரவன் ஒளிக்கிரணங்களைப் பரப்பினான்.

D) கதிரவனும் சந்திரனும் நமக்கு ஒளி தருபவை.

(v) செய்வினைத் தொடர்

(A) மூவேந்தர் முத்தமிழை வளர்த்தனர்.

(B) கதிர்கள் உழவரால் அறுவடை செய்யப்பட்டன.

(C) கோவலன் மதுரையில் கொலையுண்டான்.

(D) தேர்வு தேதி அறிவிக்கப்பட்டது.

6.வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **(3x1=3)**

(i) (A) அவள் பாடகி அல்லர்

(B) அவள் பாடகி அல்ல

(C) அவள் பாடகி அன்று

(D) அவள் பாடகி அல்லள்

(**ii)** (A) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா

(B) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடார்

(C) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாது

(D) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடான்

(iii) (A) யானைக்குட்டியும் சிங்கக்குட்டியும் ஒன்றாக வந்தன.

(B) யானைக்கன்றும் சிங்கப்பறழும் ஒன்றாக வந்தன.

(C) யானைக் கன்றும் சிங்கக்குருளையும் ஒன்றாக வந்தன.

(D) யானைக்குட்டியும் சிங்கக்குருளையும் ஒன்றாக வந்தன.

(iv) (A) வலதுபக்கச் சுவற்றில் எழுதுக.

(B) வலப்பக்கச் சுவற்றில் எழுதுக.

(C) வலதுபக்கச் சுவரில் எழுதுக.

(D) வலப்பக்கச் சுவரில் எழுதுக.

(v) (A) பூவைப் பறிக்காதே

(B) பூவை அரியாதே

(C) பூவைக் கொய்யாதே

(D) பூவைப் பிடுங்காதே

SECTION – C (Main course book 31 Marks)

பகுதி – இ -(இலக்கியம் – 31 மதிப்பெண்)

7.பின்வரும் செய்யுள் அடிகளைப் படித்து , அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

(5X1=5)

“கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய
விளியறி ஞமலி குரைப்ப, வெரீஇய.

வினாக்கள்

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) கம்பராமாயனம் (B) நெடுநல்வாடை

(C) புறநானூறு (D) அகநானூறு

ii) இப்பாடலை இயற்றியவர் யார்?

(A) நக்கீரர் (B) அம்மூவனார்

(C) ஔவையார் (D) கம்பர்

(iii) இப்பாடல் எத்திணையில் அமைந்தது?

(A) குறிஞ்சி (B) மருதம்

(C) நெய்தல் (D) முல்லை

(iv) ஞமலி என்னும் சொல்லின் பொருள் யாது?

(A) வண்டி (B) நாய் (C) காளை (D) குருவி

(v) உப்புக்கு ஈடாகக் கேட்கப்பட்டது எது?

(A) தங்கம் (B) அவல்

(C) அரிசி (D) நெல்

8.பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி. (5x1=5)

அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற தொல்காப்பியம், இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் ஆகும். எழுத்துகள் பற்றிப் பேசுகிறபோதே, செய்யுளின் வழக்கு பேசப்பட்டுவிடுகிறது. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கருதுகிறது. ஏனைய கலைகளிலிருந்து கவிதைக்கலையை வேறு படுத்துகின்ற அதன் முதன்மையான, தனிச்சிறப்பான பண்பு இது. கிரேக்கம், வடமொழி முதலிய பிற மொழிகளைவிட, தமிழ் இதனைத் திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது.பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள், பேசும்போதும் கேட்கும்போதுமான தனிச்சூழல்கள் ஆகியன மட்டுமல்லாது வரலாறு முழுக்க மொழி, மனித நாக்குகளின் ஈரம் பட்டுக்கிடக்கிறது. அதனையே இலக்கியம், தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டியிருக்கிறது.

வினாக்கள்

(i) தொல்காப்பியம் எதற்குத் தளம் அமைத்துத் தருகிறது?

(ii) எதைப் பற்றி பேசும் போதே செய்யுளின் வழக்கும் பேசப்படுகிறது?

(iii) தொல்காப்பியம் கருதும் உள்ளமைப்புகள் யாவை?

(iv) தமிழ் எதனைத் திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது?

(v) மொழி எதன் ஈரம்பட்டுக்கிடக்கிறது?

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **(2x3=6)**

(i) 1. தன்னேரில்லாத் தமிழின் சிறப்புக் குறித்துத் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்தும் செய்தி யாது?.

(ii) அரிது,பெரிது என செய்ந்நன்றிஅறிதல் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.

(iii) நின்னொடும் எழுவர் ஆனோம் – கூற்றை விளக்கி எழுதுக.

(iv) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையை எழுதுக.

10. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி

(i) பேரிடர்மேலாண்மை பற்றிய கருத்துகளைஎழுதுக. **(3x5=15)**

(ii) வாழிடம்,மணந்தகம் பற்றி பக்தவச்சலபாரதி கூறுவன யாவை?

(iii) சென்னையின் தொன்மை குறித்து எழுதுக.

(iv) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

(v) ஒலிக்கோலங்கள் பற்றி விளக்கி எழுதுக.

SECTION – D (Non-detail - 12 Marks)

பகுதி – ஈ (துணைப்பாடம் – 12 மதிப்பெண்)

11.கீழ்க்காணும் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **(1x7=7)**

(i) தம்பி நெல்லையப்பருக்கு (ii) முதல்கல் (iii) தலைக்குளம்

12. கீழ்க்காணும் கதைமாந்தரில் ஒருவரின் பண்பு நலன்களை எழுதுக.

(i) முத்தையன் (i) அல்லி **(1X5=5)**

Section – E (Creative writing - 15 Marks)

பகுதி – உ (படைப்பாற்றல் – 15 மதிப்பெண்)

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக.

(i) பழுதுபட்ட மின்கம்பத்தை மாற்ற வேண்டி மின்வாரிய செயற்பொறியாளர் அவர்களுக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

(அல்லது) **(1x6=6)**

(ii) உன் எதிர்கால இலக்குகுறித்து உன் தோழிக்குக் கடிதம் எழுதுக.
(உன் முகவரி: அ. மதி , 10.முல்லை வீதி, முத்தமிழ் நகர், கோவை -641002

14. பத்மஶ்ரீ விருது பெற்ற கைத்தறி நெசவாளரை நேர்காணல் செய்க.

(1X3=3)

15. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக. (1X6=6)

(i) ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்

(ii) கல்வி கரையில

(iii) காடும் நாடும் நம் கண்கள்